**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 30.09.2019 திங்கட்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 30.09.2019

**மன்றப்பொருள்:1**

நகராட்சி பகுதிகளில் விளம்பரம் செய்வது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை மற்றும் சுற்றறிக்கைகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1). Circular Roc.No. 2868/18 TP2, Dt: 14.02.2019
2). G.O.(4D) No.2, MAL&WS (MC1) Dt: 05.06.2018
3). Gazette Dt: 16.07.2018 Part IV Section-2
4). G.O.No. 15,16 & 17 dt: 31.01.2019
5). Gazette copy Dt: 31.01.2019 Part III Section 1(a)

**அலுவலக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1874/2017/எப்.1)

---

**மன்றப்பொருள்:2**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொதுச்சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்திற்கு ஏ4 வெள்ளை பேப்பர் எண்ணிக்கை 6 ஸ்ரீ முரகன் ஸ்டோர் அவர்களிடம் வாஙகுவதற்கு உத்தேச மதிப்பு தொகை ரூ. 1500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). ஏ4 வெள்ளை பேப்பர் அவசர அவசியம் கருதி வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 12283/2019/எச்.1)

---

**மன்றப்பொருள்:3**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள நீர்த்தேக்க தொட்டிக்கு மற்றும் நீதிமன்ற வளாகத்திற்குள் உள்ள நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவல் பணி பார்ப்பதற்கு ஆட்களை சப்ளை செய்ய ரூ. 3.60 இலட்சத்திற்கு மன்றத்தீர்மான எண்.5, நாள். 30.08.2019–ல் அனுமதி பெற்றதன் அடிப்படையில் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு ஒரு நபரை சப்ளை செய்ய – ரூ.324
2). திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு ஒரு நபரை சப்ளை செய்ய – ரூ.327

3). M/s. K.P.K. கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் என்பவர் நாள் ஒன்றுக்கு ஒரு நபரை சப்ளை செய்ய ரூ. 329

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர்.ரவிக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர்.ரவிக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

<u>மன்றப்பொருள்:4</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு—21 கவண்டன்பட்டி ரோட்டில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாய் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். ஏனவே, பொதுமக்களின் நலன்கருதி மேற்கண்ட மழைநீர் வடிகால்வாயை சரிசெய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

<u>மன்றப்பொருள்:5</u>

உசிலம்பட்டி நகராட்சி, வார்டு—6, பேருந்து நியைம் அருகில் பசும்பொன் முத்துராலிஙகத்தேவர் திரமகனானின் சிலை அமைந்துள்ளது. வரும் 30.10.2019 அன்று நடைபெற உள்ள தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தேவர் சிலையை புதுப்பிக்க அலஙகார விளக்குகள் அமைக்க நீர் ஊற்றை சரிசெய்ய போன்ற பணிகளுக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 1.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

<u>மன்றப்பொருள்:6</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு—14, மதுரை ரோடு, வடக்குப்புறம் உள்ள சாலையானது மண் சாலையாக உள்ளது. இச்சாலை குண்டும் குழியுமாகவும் மழைக்காலஙகளில் சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் செல்வதற்கு இடையூறாக இருப்பதால் மேற்கண்ட சாலையில்

பேவர் பிளாக் அமைப்பதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:7**

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் மொத்தம் 1460 தெருமின் விளக்குகள் உள்ளது. இவ்விளக்குகள் மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை ஒளிரப்பட்டு வருகிறது. மின் இணைப்புகளை கட்டுப்படுத்த கன்ட்ரோல் சுவிட்சுகள் Automatic Switch–யாக மாற்ற புதியதாக 30 எண்ணம் Automatic Swichகள் வாங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:8**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–22, பேரையூர் ரோடு, பொது மயானத்தில் MCC மையம் அமைந்துள்ள நுண் உரம் தயாரிக்கும் தொட்டிகளுக்கு வர்ணப்பூச்சு, செப்டிக்டேங்க், பைப்லைன், சின்டெக்ஸ் டேங்க், மழைநீர் வடிகால்வாய் அதற்கான மூடிகள் கிராவல் நிரப்புதல் Ramp அமைத்தல், கழிவுநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் வரைபட பலகை போன்ற பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்: 9**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–10 மற்றும் 24 ஆகிய வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் குறையாமல் இருக்க தொடர்ந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம்செய்யவும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்திடவும், சின்டெக்ஸ் டேங்க் புதியதாக அமைத்திடவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 30.09.2019 திங்கட்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

**மன்றப்பொருள்: 10**

உசிலம்பட்டி நகராட்சி பேரையூர் சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை பணி நிறைவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நகர் பகுதியில் உள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நகராட்சிகளில் செயல்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளை செய்து வரும் தொண்டு நிறுவனங்களை தொடர்பு கொள்ளப்பட்டது.

இந்நிலையில் Peoples Trust in Technical Institute திருமங்கலம் என்ற தொண்டு நிறுவனம் தனது 21.01.2018–ம் தேதிய கடிதத்தில் பல்வேறு சமூக நலப்பணிகளை செய்து வருவதாகவும், பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து நலம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சேவைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவீன எரிவாயு தகன மேடை கட்டிடம் இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி பணிகள் முடிவடைந்த உடன் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு Peoples Trust in Technical Insititute தொண்டு நிறுவனத்தால் தொடர் பராமரிப்பு செய்து வர தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், ஒரு பிரேதம் எரியூட்டுவதற்கு ஆகும் செலவினம் ரூ. 3,000/– என நிர்ணயம் செய்து இதில் 60% தொண்டு நிறுவன பங்குத்தொகையாகவும், 40% நகராட்சி பங்குத்தொகையாகவும் நிர்ணயம் செய்திடவும், மின் கட்டணம் மாதந்தோறும் தொண்டு நிறுவனத்தால் மின்வாரியத்திற்கு செலுத்தி வரவும் ஒரு வருட காலத்திற்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி மின் மயானத்தில் சட்ட விரோதமாக பிரேதங்கள் எரிப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது. தனி அலுவலரின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)
உசிலம்பட்டி நகராட்சி.

**<u>மன்றப்பொருள்: 11</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் உத்தரவின்படி இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உள்ள வீடுகளில் மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் எண்ணிக்கை 5000 அச்சடித்து வாங்குவதற்கு உத்தேச மதிப்பிட்டுத்தொகை ரூ. 12,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). அவசர அவசியம் கருதி மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் அச்சடித்து வாங்குவதற்கு செலவுகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 12</u>**

இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உள்ள வீடுகளில் மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் எண்ணிக்கை 5000 அச்சடித்து வாங்குவதற்கு ரூ. 12,000/—த்திற்கு ஆணையரின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1). | பாரதி அச்சகம், கணினி அச்சுக்கூடம்,<br>31, விநாயகர்கோவில் தெரு, தேனிச்சாலை, உசிலம்பட்டி | ரூ.12,000 |
| 2). | சன் ஆப்செட் பிரஸ், கம்ப்யூட்டர் அன் வால்போஸ்டர்<br>உசிலம்பட்டி. | ரூ. 12,300 |
| 3). | விநாயகா பிரஸ் கம்ப்யூட்டர் ஆப்செட்,<br>உசிலம்பட்டி | ரூ. 12,500 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பாரதி அச்சகம் உசிலம்பட்டி விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பாரதி அச்சகம் உசிலம்பட்டி விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 13</u>**

இந்நகராட்சியின் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் 2019—ம் மாதங்களுக்கு ஒப்பந்தப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட GST பிடித்தம் செய்த தொகையினை உரிய தலைப்பில் இணைய வழியில் பதிவு செய்தமைக்குரிய செலவினம் மூன்று மாதங்களுக்கு ரூ. 1250/— வீதம் ரூ.3750 மற்றும் வங்கிச்செலவினம் ரூ. 177—ம் சேர்த்து ரூ. 3927/— மட்டும் தனியர் வருமான வரி பயிற்றுநர் திரு. எஸ்.எஸ்.சேதுராஜ் அவர்களுக்கு வழங்கலாம் அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). GST வரிபிடித்தம் உரிய காலத்தில் செலுத்த வேண்டிய அவசியம் கருதி வருவாய் நிதியில் இச்செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 10990/2019/பி1)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)
உசிலம்பட்டி நகராட்சி.